Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## இரண்டாம் காலாண்டு பகுதியில் 93 குழந்தைகள் உயிரிழப்பு

யாழ் மாவட்டத்தில் இரண்டாம் காலாண்டில் 93 குழந்தைகள் மரணமடைந்ததாக யாழ். மாவட்ட சுகாதார அத்தியட்சகர் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஏழு நாட்களுக்கு உட்பட்ட குழந்தைகள் நாற்பத்தி ஆறு எனவும், ஏழு நாளில் இருந்து இருபத்திஎட்டு நாட்களுக்கு உட்பட்ட குழந்தைகள் நாற்பத்தி ஏழு என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இறந்த குழந்தைகளில் எழுபத்திஏழு குழந்தைகளின் (6 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் கிளை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 25 10-09-94 சனிக்கிழமை ஓசை 204

# வடக்கில் கடந்த வாரம் இராணுவம் பாரிய தாக்குதலுக்கு திட்டமிட்டிருந்தது!

## மண்டைதீவு கடற்பரப்பில் 3 மீனவர் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

மண்டை தீவுக் கடற்பரப்பில் வைத்து மூன்று மீனவர்களை இராணுவம் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த 4ஆம் திகதி மண்டைதீவுக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது இராணுவத்தினர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அவ்வேளை நீந்தித்தப்பி வர முயற்சித்த மூன்று மீனவர்களும்இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

முடியப்பு அருள்தாஸ்(22), சிலுவைநாதன் விடோ (டயஸ்) (28), அன்ரன் மைக்கல் கொலின்ஸ் (குட்டி) (24) என்ற இளைஞர்களே மண்டைதீவு இராணுவத்தினரால் கைதாகியுள்ளனர்.

தற்போது இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியவில்லை.

கடந்த ஆறாந் திகதி இரு மீனவர்கள் இக்கடற்பரப்பில் இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (தி.பா)

## பூநகரி முகாம் பகுதியில் மோதல் 2 படையினர் பலி; ஐவர் காயம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவ முகாம் மீது மேற்கொண்ட தாக்குதலில் இரு சிறிலங்கா இராணுவத்தினர் பலியானதாக சிறிலங்காபாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இத்தாக்குதல் நடைபெற்றதாகவும் இத்தாக்குதலினால் ஐந்து இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இம்மோதல்கள் ஒரு மணி நேரத்திற்கு மேலாக இடம் பெற்றதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## யுத்தநிறுத்தம் ஏற்படும் வரை தாக்குதல்கள் தொடரலாம்

(கொழும்பு)

வடபகுதி மீது கடந்த வாரத்தில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த இராணுவம் திட்டமிட்டதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது. மேலும், யுத்த நிறுத்தம் ஏற்படும் வரையில் தாக்குதல்கள் நடைபெறலாம் எனவும் அது தெரிவித்தது.

பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்ட பி பி.ஸி மேலும் தெரிவிக்கையில்,

வட பகுதி மீது கடந்த வாரத்தில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த இராணுவம் திட்டமிட்டிருந்தது. இவ் இராணுவ நடவடிக்கை கால வரையறையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ள போதும் யுத்த நிறுத்தம் ஏற்படும் வரை தாக்குதல்கள் தொடரும் எனவும் குறிப்பிட்டது.

முன்நிபந்தனையின்றி பேச்சு நடத்த இரு பகுதியும் தயார் என்று பரஸ்பரம் அறிவித்தபோதும் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் இடம்பெற்றதாகத் தெரியவரவில்லை என பி.பி.ஸி. மேலும் குறிப்பிட்டது.

## தாக்குதல்கள் நிற்கவேண்டுமாயின் யுத்தநிறுத்தம் அவசியமாகும்

- பிரிகேடியர் கெமுனு குலதுங்கா

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்றும் அடிக்கடி

## சந்திரிகா தலையீடு

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக வலயங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இவ்விடயத்தில் நேரடியாகத் தலையீடு செய்துள்ளார்.

பியகம, மற்றும் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலய தொழிலாளர்களின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மருதடியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மருதடிப் பிள்ளையார் கோவிலில் பல இலட்ச ரூபா பெறுமதி மிக்க நகைகள் மற்றும் ஒருதொகைப் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

பலியானதாக சிறிலங்காபாது ஐந்து இராணுவத்தினர் காய கப்படுகிறது.

# யாழ்: குடாநாட்டுக்கு மின்வழங்க மேலும் 4 ஜெனரேற்றர்கள் தேவை

## மின் நிலையப் பொறியியலாளர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

ஐந்து மெகா வாற்று மின் சக்தியை பிறப்பிக்கக்கூடிய நான்கு மின் பிறப்பாக்கிகள் கொழும்பிலிருந்து வந்தாலேயே யாழ். குடாநாடு முழுவதற்கும் சீராகமின்சாரம் வழங்க முடியுமென சுன்னாகம் மின் நிலையப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

குடாநாடு முழுவதும் சீரான முறையில் மின்சாரத்தை வழங்க எத்தனை மின் பிறப்பாக்கிகள் தேவையென எமது நிருபர் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கு ஒன்பது மின்பிறப்பாக்கிகள் உள்ளன. அவற்றுள் நான்கு, விமானத் தாக்குதலின் போது திருத்த முடியாத நிலையை அடைந்துள்ளன. மீதமுள்ள 5 மின் பிறப்பாக்கிகளும் திருத்தக்கூடிய நிலையில் உள்ளன இவற்றை திருத்தி அமைப்பதற்கும் கொழும்பிலிருந்து உதிரிப்பாகங்கள் வரவேண்டும். அப்படி இவை திருத்தி எடுக்கப்பட்டாலும் 4 5 மெகாவாற்று மின்சாரமே கிடைக்கும். இது யாழ்நகரத்திற்கு விநியோ

(6ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் சிலபொருள்கள்மீது தடை நீக்கப்படும்?

(கொழும்பு)

வடபகுதிக்கு எடுத்து செல்வதற்கான மேலும் சில பொருள்களின் தடை நீக்கப்படும் என கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. விரைவில் இன்னுமோர் பட்டியல் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிரிப்போ இணைப்போ சந்திரிகாவே பொறுப்பு

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரிப்போ, இணைப்போ எதுவாயினும் அதைத் தாம் கையாள்வதாக புதிய பிரதமர் அறிவித்துள்ளார். அதற்குரிய பொறுப்பு தற்போது அவரை சார்ந்தது. ஆனால் ஐ தே. கவிற்கு நாட்டுநலனே பிரதானம் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சகல கட்சிகளின் அங்கீகாரத்துடன் வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படும் என ஐ தே.க தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது. மாகாணசபைகளை ஐ தே க. அமைத்தது. அதிகாரம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்தில் நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ் குடாநாட்டில் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற வீதி விபத்து சம்பவங்களில் நால்வர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## நரோமா பயணிகளுக்கு

நாளை 'நரோமா' கப்பலில் பயணம் செய்ய செயலகத்தில் பணம் செலுத்தியவர்கள், அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறையில் சமுகம் கொடுக்கும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

## ஜனநாயகவிரோதமுறையில் அரசைக் குலைக்கேன்

### காமினி திசாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக விரோத முறையில் அரசைக் குலைக்கும் நடவடிக்கையில் ஐ. தே. க. ஈடுபடமாட்டாது என எதிர்க்கட்சித்தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் பேசிய அவர் தினமின, டெய்லிநியூஸ் பத்திரிகைகளில் வெளியான சதி குறித்த செய்தி தவறு

(6ஆம் பக்கம் பார்க்க)

ங்களில் இன்றும் அடிக்கடி இடம்பெறும் மோதல்கள் நிறுத்தப்படவேண்டுமாயின் உடனடியாக உத்தியோக பூர்வமாக ஒரு போர்நிறுத்தம் அவசியம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா தெரிவித்தார்.

லண்டன் பி. பி. ஸியின் சிங்களசேவைக்கு அவர் பேட்டியளித்தபோது சிறிலங்காவின் புதிய அரசாங்கம் வடக்கு- கிழக்குப் பிரச்சினையை பேச்சுவார்த்தைமூலம் தீர்க்க முன்வந்துள்ள இவ்வேளையில் வடக்கு-கிழக்கில் நடைபெறும் தாக்குதல்கள் குந்தகம் விளைவிக்காதா? என்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பூநகரியில் நடைபெற்ற மோதல் திடீர் என ஏற்பட்டது எனவும் இதனை இருதரப்பினரில் எவரும் திட்டமிட்டு செயற்படுத்தவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் பூநகரி முகாமைப் பாதுகாக்கும் நோக்குடன்முகாமை விட்டு வெளியேறி மறைந்து நின்றதாகவும் அப்போது விடுதலைப் புலிகள் தமது நிலைகளில் நின்றதாகவும்திடீரென இருதரப்புக்கும் இடையில் மோதல் வெடித்ததாகவும் கெமுனு குலதுங்க தெரிவித்

[6ஆம் பக்கம் பார்க்க]

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

## இன்று பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழா இன்று மூன்று அமர்வுகளில் யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வினை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. குணரத்தினம் தலைமைதாங்கி நடாத்துகின்றார்.

இதில் முதலாவது அமர்வு காலை 9.00 மணிக்கும் இரண்டாவது அமர்வு 11 00 மணிக்கும் மூன்றா

(6ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானம் ஏற்படுமென்ற நம்பிக்கை இராணுவத்திற்கு இல்லையாம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை இராணுவத்திற்கு இல்லை என சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய ஐ நா. உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவரிடம் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து மேற்படி இராணுவ அதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த இராணுவ அதிகாரி அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கில் சமாதானம் ஏற்படலாம். ஆனால் அது நிரந்தரமில்லை. நிரந்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு சந்திரிகாவின் கடிதம் நேற்று அனுப்பப்பட இருந்தது

## லங்காதீப பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நேற்று தமது பதில் கடிதத்தை விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பி வைக்க இருந்ததாக ''லங்காதீப'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்பதனை ஏற்றுக் கொண்டு பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா உத்தியோக பூர்வமாக இக் கடிதத்தை அனுப்பி வைக்கவிருந்தார் எனவும் இக் கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பிவைக்கப்படவிருந்ததாகவும் அது மேலும் தெரிவித்தது.

## ஈழநாதம் வன்னிப்பதிப்பு ஓராண்டு நிறைவில்

ஈழநாதம் 'வன்னிப்பதிப்பு' இன்று தனது முதல் வருடத்தைப் பூர்த்தி செய்கின்றது.

வன்னி மண்ணிலிருந்து வெளியாகும் முதல் தினசரி என்ற பெருமையைப் பெற்றுள்ள ஈழநாதம் 'வன்னிப்பதிப்பு' பல்வேறு நெருக்கடிகளுக்கும், போர்க்கால சூழலுக்கும் மத்தியில் வெளிவந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவதில்லை என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முடிவு செய்துள்ளார். இவ்வாறு ஐ தே.க. வட்டாரங்கள் நேற்று இரவு தெரிவித்தன.

இத்தேர்தலில் ஐ. தே. கவின் வேட்பாளராக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் காமினி திசாநாயக்கா நியமனம்பெற்றுள்ளார்என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

டி.பி. விஜேதுங்கா தமது முடிவுக்கு என்ன காரணம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நினைத்தாலே இனிக்கும்

மணலாறு கச்சான் அல்வா சுத்தமானது, சுவையானது அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர் பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம் சம்பியன்லேன் கொக்குவில் எல்லா இனிப்பு வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம் (9327)

### ஆனந்தம் சீயாக்காய்

சிரசின் தனித்துவத்தை பேணுவதற்கு வேண்டிய மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து சித்தமருத்துவ நிபுணர் ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர், பேன் சொடுகு, அழுக்கு முற்றாக அகற்றி சுகவாழ்வு தருகிறது கேட்டு வாங்குங்கள் ஆனந்தம் சீயாக்காய் பவுடர்.
(சி-10288)

### தவறிவிட்டது

''உரும்பிராய் தெற்கு உரும்பிராயைச் சேர்ந்த பாமா விக்கினேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 698090316V 21-8-94 ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் பணப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்,
(9346)

### ஆங்கில ஆசிரியர் தேவை

ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வாரநாட்களில் ஆங்கில மொழி போதிக்கக் கூடிய 5 வருட கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர் தேவை. 16.09.94ற்கு முன் விண்ணப்பிக்கவும் செயலாளர் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி. (9347)


# அமைதிஏற்படவேண்டும் படையினர் பிரார்த்தனை

## இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் குலதுங்க

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் யுத்த நிலை நீங்கி அங்கு அமைதி ஏற்பட வேண்டும் என இராணுவ வீரர்கள் பிரார்த்திக்கின்றனர் என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கமாக இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். யுத்தம் குறித்து நாம் அறிவோம் அதன் அனர்த்தங்களிலிருந்து எல்லோரும் விடுபட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

சமாதான முயற்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்ட கடந்த சில தினங்களுள் எவ்வித குறிப்பிடத்தக்க சம்பவங்களும் வடக்கில் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு - புலிகள் பேச்சுக்களில்

# பங்குபற்ற அனுமதிக்குமாறு புளொட் வற்புறுத்தாது

(கொழும்பு)

பிரச்சினைக்கு தீர்வுகாண புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் புளொட் அமைப்பு அதில் கலந்துகொள்ள வலியுறுத்தமாட்டாது என புளொட் தலைவர் சித்தார்த்தன் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் தெரிவித்துள்ளார்.

புலிகளுடனான அரசின் பேச்சுக்கு புளொட் ஆதரவு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

# றோகணவின் மனைவிக்கு பாதுகாப்பு சிரமம்

ஜனதா விமுக்தி பெரமுனயின் தலைவர் றோகண விஜேவீராவின்மனைவியையும் பிள்ளைகளையும் விடுதலை செய்ய முடியும் என்றும் ஆனால் அதன்பின் அவர்களின் பாதுகாப்பு தான் இன்று முக்கியமானது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படை முகாமில் தற்போது இருக்கும் திருமதி றோகண விஜேவீர மற்றும் அவரின் பிள்ளைகளை தாம் விடுதலை செய்ய தயாராக இருப்பதாகவும் ஆனால் விடுதலையின் பின்னர் இவரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க முடியாது எனவும் அவர் கூறினார்.

# முதனிலை.இளநிலைதேர்வு நவம்பரில் நடாத்தப்படும்

ஆண்டு - 5 இற்கான தமிழீழ முதனிலைத் தேர்வு ஆண்டு -8 இற்கான இளநிலை தேர்வு என்பன தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆலோசனை வழிகாட்டலுக்கு இணங்க நவம்பர் முதல் வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். முதனிலைத் தேர்வில் 5 பாடங்கள் மட்டும் நடத்தப்படும் இளநிலை தேர்வில் 9 பாடங்களில் நடத்தப்படும்.

இத்தேர்வில் முதலிடம் பெறும் தேர்வு நாடிகளுக்கு தேசிய, கோட்ட மட்ட பரிசுகள் சான்றிதழ்கள் தமிழீழ கல்வி கழகத்தால் வழங்கப்படும்.


## தவறிவிட்டது

4-9-94 அன்று கிளாலிக்கும், கொடிகாமத்திற்குமிடையில் அடையாள அட்டைகள் (3) கடவுச்சீட்டு (3) காதுகேட்கும் கருவி அடங்கிய சிவப்பு நிற கைப்பை தவறிவிட்டது அ. அ. இல- 402270080 V - 476624690 V - 245703325 Vகண்


# அவசர காலச் சட்டம் பழிவாங்கலுக்கே பயன்பட்டது

## பாராளுமன்றில் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிரிக்கு எதை விட்டுக் கொடுக்கிறோம் என்று சிந்திக்காமல், உடன்பிறப்புக்கு எதைக் கொடுக்கப் போகிறோம் என்று சிந்தித்தால் பிரச்சினை இலகுவாக தீர்ந்துவிடும் என பிரதி அமைச்சர் பெ சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்டப்பிரேரணை மீது கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் பேசும் போது அவர் மேலும் கூறியதாவது அவசரகாலச் சட்டம் பல பிரதேசங்களிலிருந்து நீக்கப்பட்டது பெருமை தரக் கூடியதாகும். வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு முயற்சி வேகமாக எடுக்கப்படுவதனால் நம்பிக்கை வலுத்து வருகிறது.

கடந்த காலங்களில், சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது வெளிநாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும். அரசியல் விமர்சனங்களிலிருந்து தப்ப வேண்டும் என்றே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது இப்போது எடுக்கப்படும் முயற்சி அவ்வாறு இருக்கக் கூடாது.

பயங்கரவாதத் தடைச்சட்டமும், அவசரகாலச் சட்டமும் கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்களுக்காகவேபயன்படுத்தப்பட்டன. அடிப்படைஉரிமைகளும்மீறப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

பல இளைஞர்கள் வழக்காடப் பலமில்லாததால், குற்றங்களை ஒப்புக் கொண்டார்கள். இது மிகவும் அவமானகரமானது அவசரகாலச் சட்டம் முன்னரே நீக்கப்பட்டிருந்தால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கக்கூடும். பல இளைஞர்கள் காணாமல் போயிருக்க மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கான யூலை மாதத்திற்கான இறுதி இரண்டு வாரங்களுக்குமான இலவச உலர் உணவுப் பொருள்கள் யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியினால் பல நோ.கூ. சங்கங்களுக்கு தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இவற்றை பெற்றுக் கொள்ளாத பல நோ.கூ. சங்கங்கள் உடன் பெற்று இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கும்படி புனர்வாழ்வுப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்- (பா). தி

# லங்கா சீமெந்து சம்பளக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் ஆடி ஆவணி மாதச் சம்பளக் கொடுப்பனவு எதிர்வரும் 12 ந் திகதி யாழ் வர்த்தக வங்கியில் வைத்து காலை 9 மணிமுதல் ஒரு மணி வரை வழங்கப்படவுள்ளதாக லங்கா சீமெந்து லிமிட்டெட் நிறுவன இயக்குநர் பகுதி தலைவர் அறிவித்துள்ளார்.


அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயம் மணவாளக்கோல சங்காபிஷேக

## விஞ்ஞாபனம்

காலம்:- 11-9-94 ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை-

இரவு:- தண்டிகை உற்சவம்

நாதாஞ்சலி- காலை, மாலை

நாதஸ்வர மேதை N. R. கோவிந்தசாமியின் புதல்வர்கள்

நாதஸ்வர வித்துவான் K. R. சுந்தரமூர்த்தி குழுவினர்

நாதஸ்வர வித்துவான் S. S சிதம்பரநாதன் குழுவினர்

நாதஸ்வர வித்துவான் P. நாகேந்திரம்

தவில் வித்துவான் K. சிவகுமாரன்

இரவு ஒன்பது மணியளவில்;


# எரிகாயங்களினால் இருவர் பலி

[யாழ்ப்பாணம்]

எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவர் மரணமானார்கள்-

கொக்குவில் கிழக்கு செம்பியன்லேனை சேர்ந்த கபாலசிங்கம் [வயது 54] என்பவருடன் ஒரு பெண்ணுமே மரணமடைந்தவர்களாவர்-

# வரதராஜ பெருமாள் நாடு திரும்பலாம்

## கொழும்பு பத்திரிகை தகவல்

(கொழும்பு)

வரதராஜப்பெருமாள் நாடு திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது என கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன கடந்த தேர்தலில் இவரின் ஈ பி ஆர் எல் எப். படுதோல்வியடைந்த போதிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருப்பதால் பெருமாள் நாடு திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

இந்தியாவில் உள்ள ஏனைய ஈ.பி ஆர் எல். ப் உறுப்பினர்களும் மீண்டும் நாடு திரும்பி கட்சி நடவடிக்கையில் ஈடுபட திட்டமிடுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது


## நினைவு கூருகின்றோம்...

### 10-09-1994

1984-ம் ஆண்டு இத்தினத்தில் மணலாறு-அளம்பில், செம்மலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவ வண்டித்தொடர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**லெப். எட்வின்** (இரத்தினசபாபதி திலீபன்-புதுக்குடியிருப்பு - மணலாறு)

1988-ம் ஆண்டு மட்டு-தாழங்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**மேஜர் சந்திரன் - வள்ளுவன்** (காத்தமுத்து சிவஜெயம்-அமிர்தகழி-மட்டு)

இதேசம்பவத்தில் இடம்பெற்ற இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சிறி - டைகர்தேவன்** (தம்பிப்பிள்ளை செந்தில்நாதன்-புதூர்-மட்டு)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய,

**குட்டி** (து கிருபாமூர்த்தி - - -)

1990-ம் ஆண்டு யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜனாத்** (- - -)

இதேபகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ரவாஸ்** (யோகரட்ணம் புனிதராசா-வசாவிளான் -யாழ்)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**விவேகன்** (சீனு அரசரட்ணம்-எம். சி. குவாட்டஸ், 67 ...

## இறைச்சிக் கோழி

வேண்டிய நிறைகளில் புறோயிலர், இறைச்சிச் சேவல், விறாத்துக்குஞ்சுகள், வளர்ப்புக்குகந்த குஞ்சுகள் பேடுகள், ஊர்க் கோழிகள், நல்லின அடைமுட்டை கிடைக்கும் யாழ்ப்பாணம் வீதி, உரும்பிராய்ச் சந்தி (9348)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி புதன், சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்) (9306)

## தேவை

மணலாறு கச்சான் அல்வா தயாரிப்பாளர்களான, ''பாரதி'' நிறுவனத்தாருக்கு எல்லா இனிப்பு வகைகளையும் யாழ் மாநகர சபை எல்லைக்குள் சைக்கிளில் சென்று விநியோகிப்பதற்கு ஒருவர் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் அல்லது கமிஷன் வழங்கப்படும்.

பாரதி நிறுவனம் 19 சம்பியன் லேன் கொக்குவில்.

(9350)

## தவறிவிட்டது

4-9-94 அன்று கிளாலிக் கரையில் அலோசியஸ் ஜெசிந்தா (645753350 V) அலஸ்ரின் திரேசம்மா (406042359 V) தாசியஸ் மரியராணி (496530780 V) ஆகியோரின் அடையாள அட்டைகளும் வடபகுதிக்கு வெளியே செல்லும் அனுமதிப் பத்திரமும் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (9339)

---

உருவ அடங்கிய சிவப்பு நிற கைப்பை தவறிவிட்டது அ. அ. இல- 402270080 V - 476624690 V - 245703325 V கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும் (9314)

---

### யாழ்: பல்கலைக்கழக

## பட்டமளிப்பு விழா - 1994

மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வியை நிறைவு செய்து பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்று பட்டதாரிகளாக வெளியேறி நாட்டுக்கு சேவையாற்ற உள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் எமது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறுகின்றோம்.

## "ஞானம்ஸ் படப்பிடிப்பு கலையகம்"

உங்களை வரவேற்கின்றது.

முக்கிய குறிப்பு:- 11.09.94 ஞாயிறும் பிற்பகல் 2 மணி வரை உங்கள் வசதி கருதி திறக்கப்பட்டிருக்கும்.

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**
**301, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-10309)

---

அம்பாள் சனசமூகநிலைய கட்டிட நிதிக்காக 7-9-94 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டு இலக்கம் வருமாறு:

முதல் பரிசு 2154 துவிச்சக்கரவண்டி
இரண்டாம் பரிசு 2712 பெற்றோல்மாக்ஸ்
மூன்றாம் பரிசு 2573 சுவர்மணிக்கூடு

10 ஆறுதல் பரிசுகள்:-

6898, 49, 7147, 3511, 3208, 52, 3556, 2562 1513, 1406,

தலைவர்
அம்பாள் ச. ச. நிலையம்

(சி 10308)

---

தவில் வித்துவான் K. சிவகுமாரன்
இரவு ஒன்பது மணியளவில்;
பண்ணிசைக் கச்சேரி
செல்வி இராஜேஸ்வரி விநாசித்தம்பி அவர்கள்
இரவு 10 மணி முதல் இன்னிசை விருந்து
இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கம் குழுவினர்.

- தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு
**யோகா ஆடை அகம்**
**10 பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

சி/10312

---

## 3 ஆம் ஆண்டு நினைவாக

பிறப்பு 21-09-74



வீரச்சாவு 10-09 91

**2-ம் லெப்டினனட் ஜான்**
**திருநாவுக்கரசு நந்தகுமாரன்**
**(மயிலியதனை, தொண்டமானாறு)**

இதே தினத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியை தெரிவிக்கின்றோம்

மா. லோகேஸ்வரன் [மாமன்] பெற்றோர் சகோதரர்கள் உறவினர்கள்
(ஸ்ராலின் மரக்காலை, சுன்னாகம்)

(9335)

---

**விவேகன்** (சீனு அரசரட்ணம்-எம். சி. குவாட்டஸ், 67 எல்லைவீதி - மட்டு)
**கப்டன் கார்த்திக்** (சிவஞானம் சிவகுமார்-வன்னிவிளாங்குளம்-மாங்குளம்)
**2-ம் லெப். சிவராமன் - நாச்சியப்பன்** (பரராசசிங்கம் சந்திரசேகரன்-வவுனியா)
**ஜெகதீஸ்** (பெருமாள் சிங்கராசா-ஊற்றுக்குளம்-கிளிநொச்சி)

முன்னாள் வடமராட்சிப் பிரதிப் பொறுப்பாளரும் வடமராட்சி தாக்குதல் பிரிவு தளபதியுமான,

**மேஜர் மேகன்** (ஜெகநாதன் நிர்மலநாதன்-உடுப்பிட்டி, தொண்டமானாறு-யாழ்)
**2-ம் லெப். ஜான்** (திருநாவுக்கரசு சாந்தகுமார்-மயிலிபதனை, தொண்டமானாறு-யாழ்)
**வாசு** (இராசசிங்கம் ஜெராட் ஞானரஞ்சித்-நெல்லியடி சரவெட்டி மேற்கு, யாழ்)
**வாகீசன்** (செல்லையா தயாளன்-கரணவாய் கிழக்கு, கரவெட்டி-யாழ்)

1992-ம் ஆண்டு மட்டு-அம்பிலாந்துறை, கன்னாக்காட்டுப் பகுதியை சிறிலங்கா இராணுவத்தினரும் தேசவிரோதசக்திகளும் சேர்ந்து சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கோகுலதாசன் - கோகுலன்** (திருகேசு பேரின்பம்-செட்டிபாளயம்-மட்டு)
**ஊர்மிலன் - செல்வராஜ்** (பேரானந்தன் சிறிகுகன்-பெரியபோரதீவு-மட்டு)
**பிரிஜாபதி - தயாநிதி** (கைலாயபிள்ளை தயாநிதி-வாழைச்சேனை-மட்டு)

இதேசம்பவத்தின் போது கொல்லப்பட்ட ஆதரவாளர்,

**சற்குணம்** (கறுத்தான்பிள்ளை சற்குணசிங்கம்-அம்பிலாந்துறை-மட்டு)

1993-ம் ஆண்டு மன்னார் - பூநகரிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச் சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் கதிரவன் - றோகான்** (வீரப்பன் சந்திரன்-2-ம் யூனியற், சேமமடு-வவுனியா)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10305)

நல்லூர் இன் நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


## B. A

[பேராதனை]

விரிவுரைகள்

ஆரம்பம். 10 - 9 - 94 (11 மணி)

## G. A. Q.

டிசம்பர் பரீட்சைக்கான

மீட்டல் விரிவுரைகள்

ஆரம்பம் 10 - 9 - 94 (8 மணி)

விபரங்களுக்கு;

S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி-10300)



## நல்லினக்கறவைப் பசு தேவை

பசுவின் விபரம்:-

கூடிய ஜே. சி. கலப்புடையதாகவும் இரண்டாம் ஈற்றிற்கு உட்பட்டதாகவும் நாள் ஒன்றிற்கு 10 லீற்றர் பாலுக்கு மேல் சுறக்கக்கூடியதாகவும் உள்ள கறவைப் பசுவை விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் அதன் விற்பனை விலையையும் மற்றும் மேற்கண்ட விபரங்களையும் குறிப்பிட்டு தங்களது விலைக்கூற்றினை 20.09.94ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/10302)



## பிரபல்ய அரிசி ஆலை விற்பனை

பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள ''குமரன் அரிசி ஆலை'' நிலப்பரப்புப் 10; இரண்டு கட்டிடங்கள் 110'×48', 100'×40', இரண்டு பச்சை குத்தும் யந்திரங்கள்; NO: 1 அல்லர் ஒன்று செப்பரேற்றர் ஒன்று, 8×4 போயிலர் ஒன்று, நெல் ஊறப்போடும் தொட்டிகள் நான்கு, (10×10), புழுங்கல் காயப்போடும் களம் 80'×60', விற்பனைக்கு உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

க. வே. சரவணமுத்து

(9340)



## கேள்வி கோரல்

லொறி இல. த 1-4265

மேற்படி எமது சங்க லொறிக்கு முன்பக்க போனற், இரண்டு பக்க மட்காட், முன்செல் என்பவற்றை திருத்தி ஒட்டிப்பூட்டுவதற்குரிய கூறுவிலையும் முன்பக்க போனற், இரண்டுபக்க மட்காட், முன்செல் என்பன


# நவம்பர் 20-ம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நவம்பர் 20-ந் திகதிக்கு முன்னர் எப்படியாவது புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டே ஆகவேண்டும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பின்படி ஜனாதிபதியின்பதவிக் காலம்முடிவடைய ஒரு மாதம் இருக்கையிலேயே அடுத்த ஜனாதிபதி தெரிவாகி இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்,

இதன்படி இன்னும் 3 கிழமைகளுக்குள் நியமனப் பத்திரங்கள் தாக்கலாக வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலை நடத்தக் காரணம் என்ன?

### அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் விளக்கம்

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக முறையை மாற்றுவதற்கான அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கான, மக்களின் ஆணையை எதிர்பார்த்தே ஜனாதிபதி தேர்தலை திட்டமிட்டபடி நடத்த அரசு விரும்புவதாக நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்,

கடந்த திங்களன்று நடந்த கட்சித்தலைவர் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார். ஜனாதிபதி நிர்வாக அமைப்புமாற்றத்திற்காகதிருத்தத்துடன் மேலும் சில அரசியலமைப்பு திருத்தங்களையும் செய்ய அரசு உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# படையினருடனும் பேச்சு நடத்துவேன்

### பிரதமர் சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினையை தீர்க்கும் புலிகளுடனான பேச்சுக்களில், பாதுகாப்புப் படையினர் பொது மக்களுடன் ஆலோசனை கலந்தே பேச விருப்பதாக பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று, தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளை சந்தித்தபோதே அவர் இவ்வாறு அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

# சகல அரசியல்கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்குக

### வாசுதேவ கோரிக்கை

சகல அரசியற் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கும்படி பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவை, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நவசமசமாஜக் கட்சி பிரமுகருமான வாசுதேவ நாணயக்கார கோரியுள்ளார்.

இது குறித்து பிரதமருக்கு கடிதமொன்றை எழுதியுள்ள அவர் 80 ஆம் ஆண்டில் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சகல தொழிலாளருக்கும் மீள வேலைவாய்ப்பும், நட்ட ஈட்டும் பணமும் வழங்கும்படியும் அவர் கேட்டுள்ளார்,

# புலிகள் உறுப்பினர்கள் விடுதலை குறித்து ஆராய்வு

பாதுகாப்பு படையினரால் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை விடுதலை செய்வது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று வவுனியா இராணுவ முகாமில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் அவ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# சிங்கள தலைவர்கள் பிள்ளைகளில் போரில் இறந்தோர் எத்தனை பேர்?

### லயனல் பெர்னாண்டோ கேள்வி

(கொழும்பு)

தொழிலின்மையும், யுத்தம் தொடர்பாக உருவாக்கப்பட்டிருந்த வீரத்துவம் தொடர்பான போலியான எண்ணமே பல பொது மக்களின் புதல்வர்கள் இராணுவத்தில் போரிட சென்றமைக்கான காரணமாகும் என தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சின் செயலாளரும், லேக்ஹவுஸ் பணிப்பாளருமான லயனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உண்மையில் சிங்கள இனத்தையும், பௌத்த மதத்தையும் காப்பதற்காக முன்வந்து குரலெழுப்பும் அதிகாரவர்க்க தலைவர்களின் பிள்ளைகளில் எத்தனை பேர் யுத்தத்தில் இறந்து போயிருக்கிறார்கள்?

7,50,000 யாழ்மக்கள் தொடர்பாக தெற்கில் வாழும் இனப்பற்றுமிக்க மக்களைப் போன்று அவர்களுக்கும் மொழி கலாசாரம், சமூகக் கண்ணோட்டங்கள், மனிதர்களாக எழுந்து நிற்கும் சுதந்திரம் என்பன கிடையாதா? தேசிய முறைமை பற்றி பேசும் சிங்களத் தலைவர்களில் எத்தனை பேர் வடக்கில் வாழும் சாதாரண மக்களில் இந்த அடிப்படை உரிமைகளைப் பற்றி பேசியிருக்கிறார்கள் யாழ் குடாநாட்டில் மட்டும் அகதிகளாகியிருக்கும் மக்களின் எண்ணிக்கை 2 லட்சத்துக்கும் அதிகமாகும். அந்தப் பிரதேசத்தின் வீடு வாசல்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் அதிகமானவை அழிந்து போயுள்ளன.

வடபகுதியில் 5,94,000 வாக்காளர்களில் வாக்குகளைப் பிரயோகிக்க முடிந்தோர் 13,000பேர் மட்டுமே, சில இடங்களில் 8 பேர் மட்டும் வாக்களித்துள்ளனர். இத்தகையதோர் சூழ்நிலை ஏற்படுத்துவதற்கு இரு தரப்பினருமே பொறுப்பேற்க வேண்டும் இவ்வாறு நியாயமற்ற முறையில் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்தால் இந்நாடு மக்கள் இல்லாத சூனியமாகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

சந்தர்ப்பவாத இனவாதத்தினால் மக்களைப் பிரித்து பேதங்களை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றும் கடந்த காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்டது. எனினும் இனவாதத்தை தாம் ஏற்கவில்லை என உலகுக்கு கூறிய இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் அந்த முயற்சியையும் நிராகரித்தனர். அண்மையில் மக்கள் வழங்கிய தீர்ப்பு யுத்தத்தை தொடர்வதற்கானதா அல்லது அமைதிக்கு கை அசைப்பதற்கானதா என்பது தொடர்பாக முடிவெடுக்கப்பட வேண்டும் அதன்மூலம் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான மார்க்கத்தை அமைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என மேலும் அவர் தெரிவித்தார்.

---

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் நடாத்தும்

# லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவையொட்டி சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்

1994-09-26 லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு தமிழீழ மாணவர்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்த விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

### போட்டி விதிமுறைகள்

**கீழ்ப்பிரிவு 12 வயதிற்குட்பட்டவர்கள்**

01. கவிதைகள் பதினைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் ஐம்பது சொற்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்,
    அ) லெப். கேணல் திலீபனின் ஈகம்
    ஆ) இந்திய இராணுவத்தின் கொடுமைகளால் தமிழ்மக்கள் அடைந்த துன்பம் என்பவற்றுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**மத்திய பிரிவு 13 வயது தொடக்கம் 16 வயதுவரை**

01. கவிதைகள் இருபத்தைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், சிறுகதை கோட்டுத் தாளின் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்டதாகவும்: கட்டுரை இருநூறு சொற்களுக்குள் அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்
    அ) லெப். கேணல் திலீபனின் ஈகம்
    ஆ) இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் தமிழ்மக்கள் புலிவீரர்களைக் காக்க விதம்

இரண்டு பக்க மட்காட், முன்செல் என்பவற்றை திருத்தி ஒட்டிப்பூட்டுவதற்குரிய கூறுவிலையும் முன்பக்க போனற், இரண்டுபக்க மட்காட், முன்செல் என்பன புதிதாகப் போடுவதற்கும் உரிய கூறுவிலையும் கோரப்படுகின்றது. 20-9-94-ந் திகதிக்கு முன்னர் அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலையை பொதுமுகாமையாளர், மானிப்பாய் பல நோ. கூ. சங்கம், என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சங்க வேலை நேரங்களில் லொறியினைப் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
மானிப்பாய் ப நோ. கூ. சங்கம்.

(சி-10306)

---

குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக பிரதி பாதுகாப்பு ... நடந்த பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் அவ இவ்வாறு தெரிவிந்துள்ளார்-

## எயர்பஸ் கொள்வனவை மேற்கொள்ள முடிவு

(கொழும்பு)

பிரான்ஸ் எயர்பஸ் நிறுவனத்திடமிருந்து எயர்பஸ் விமானக் கொள்வனவு செய்ய சிறிலங்கா அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்ச்சைக்குரிய இக் கொள்வனவானது ஏயர்லங்காவும் சுவிஸ் நிறுவனம் ஒன்றும் செய்து கொண்ட உடன்படிக்கையின் சட்ட அம்சங்களை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாக அமைச்சரவை இதற்கான அங்கீகாரத்தை வழங்கியதாக சந்திரிகா அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க இதுபற் விபரிக்கை றி யில் ஐ. தே. க செய்த ஒப்பந்தத்திற்கு அமைய இக் கொள்வனவு இடம் பெறாவிட்டால் ஏயர்லங்கா நிறுவனம் செலுத்திய முற்பணத்தை இழக்க நேரிடும் என்றார்.

மேலும் அபராதத்தொகையாக 10 கோடி டாலர்களை செலுத்த வேண்டியிருக்கும் என்பதாலும் இக்கொள்வனவைத் தொடர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது இதன்படி முதல் இரண்டு விமானங்களையும் கொள்வனவு செய்யும் உடன்படிக்கையில் எயர்லங்கா நிறுவனம் கைச்சாத்திடவுள்ளது.

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசா கந்தசாமி
(தொண்டமனாறு)

எமது அன்புக்கும், பண்புக்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாகி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே. பாசம் தனை பொழிந்து பண்புதனை வளர்த்து குடும்பத்தின் ஒளி விளக்காய் ஒளிர்ந்து எமக்கெல்லாம் கலங்கரை விளக்காகிய தானைத் தலைவனே, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைபிரார்த்திக்கின்றோம்.(11-9-94) நாளை அவரது இல்லத்தில் நடைபெறும் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலியில் உற்றார், உறவினரை கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

''மணியம் மடம்'' - குடும்பத்தினர்.
செல்வச்சந்நிதி,
தொண்டமனாறு.

(9341)

---

## அறிவித்தல்

சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்
யாழ். மாவட்டம்

07-09-94-ல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்ட லாபச்சீட்டின் பரிசில்களை பெற்றுக்கொள்ளும் பரிசு

| சீட்டின் இலக்கங்கள்: | ஏனைய ஆறுதல் பரிசில்கள் |
|---|---|
| 1-வது 9099 | 1- 503 |
| 2-வது 1463 | 2- 3715 |
| 3-வது 4911 | 3- 2863 |
| | 4- 4839 |
| | 5. 9 |

பரிசுக்குரிய பொருட்களை
10-09-94 தொடக்கம் காரியாலய
நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

கவனத்திற்கு:- சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தங்களது அங்கத்துவ அறிமுக கையேடுகளை தலைமைச்சங்கத்தில் 10-10-94க்குமுன்பதாக ஒப்படைத்து புதிய அங்கத்துவ கையேடுகளைப் பெற்றுக்கொள்ளும்படி அன்பாக கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

சேவையில் உள்ள
யோசேப் தாவீது
மாவட்ட செயலாளர்

(9338)

---

அ) லெப். கேணல் திலீபனின் ஈகம்
ஆ) இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் தமிழ்மக்கள் புலிவீரர்களைக் காத்த விதம்
இ) லெப். கேணல் திலீபனின் வீரச்சாவின்போது மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பும், இந்திய எதிர்ப்பு உணர்வும் என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

### மேற்பிரிவு 17 வயதிற்கு மேற்பட்டோர்

01. கவிதைகள் நூறு சொற்கள் வரையிலும், சிறுகதைகள் கோட்டுத் தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் கோட்டுத் தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்
அ) லெப். கேணல் திலீபனின் ஈகம்
ஆ) இந்தியா எம் மண்ணுக்குச் செய்த துரோகம்.
இ) எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகாலத் தொடர்புகள் இன்றைய நிலைமை
ஈ) இந்திய இராணுவம் எம் மண்ணுக்கு வந்ததற்கான பின்னணி
உ) உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை எம் மண்ணில் இருந்து அகற்றுவதற்காக தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமான நடவடிக்கைகளும், புலிகளின் நுண்ணிய போர்த் திறனும்
ஊ) இந்திய இராணுவம் புலிகளிடம் எவ்வாறு தோற்றது என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

### கீழ், மேல், மத்திய பிரிவுகளுக்கான பொதுவான விதிமுறைகள்

01. படைப்புக்களை தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
02. ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம்.
03. போட்டியாளர் தனது அ) பெயர்
ஆ) பாடசாலையின் பெயர்
இ) கல்வி கற்கும் ஆண்டு
ஈ) வகுப்பாசிரியர் அல்லது அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பம்
என்பவற்றை தனியே ஒரு தாளில் எழுதி படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
உ) கடித உறையின் இடதுபக்கத்தில் தியாகி திலீபனின் 7-ம் ஆண்டு நினைவுப் போட்டி எனக் குறிப்பிடல் வேண்டும்.
04. படைப்புக்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புச் செயலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. **போட்டி முடிவுத் திகதி 1994-09-13**
முடிவுத் திகதிக்கு பிந்திவரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.
06. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
07. கோட்ட, மாவட்ட ரீதியாக சிறுகதை, கவிதை, கட்டுரை போட்டியில் 1-ம். 2-ம், 3-ம் இடத்தில் தெரிவாகும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளும்,. சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வளர்ந்துவரும் இளைய தலைமுறையினரின் படைப்பாற்றலை வெளிக்கொண்டு வரும் முகமாக நடாத்தப்படும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்து தமிழீழ மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

**விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு,**
**மகளிர் பிரிவு**

(9343)

## 2ஆம் ஆண்டின் நிறைவில்

# தமிழ்நிலா நகை மாடம்

### வழங்க இருக்கும் பரிசுத்திட்டம்

வாடிக்கையாளர்களே!

நிறுவனம் ஆரம்பித்த காலம் முதல் (09.09.1992 - 09.09.1994) நீங்கள் எம் நிறுவனத்தில் பெற்ற விற்பனைச் சிட்டைகள் குலுக்கப்பட்டு 10 பரிசுகள் உங்களுக்காக வழங்கப்படவுள்ளன.

**1-ம் பரிசு** ஒரு தங்கப் பவுண் காசு (22 கரட்)
**2-ம் பரிசு** அரைத் தங்கப் பவுண் காசு (22 கரட்)
**3-ம் பரிசு** கால் தங்கப் பவுண் காசு (22 கரட்)

மேலும் 500/- கொண்ட ஏழு பரிசுகள்
பரிசு விபரங்கள் தமிழீழ நாளேடுகளில் வெளியிடப்படும்.

## மூன்றாம் அகவையில் கால் பதிக்கும்

# தமிழ் நிலா நகை மாடம்

பேருந்து நிலையம், நெல்லியடி, கரவெட்டி.

பேருந்து நிலையம், நெல்லியடி, கரவெட்டி.

## புதிய ஆண்டில் நீண்டு வளர வாழ்த்தும் சகோதர நிறுவனங்கள்:

| | |
|---|---|
| **அழகு நிலா நகை மாடம்**<br>213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **தமிழ்பரிதி நகை மாடம்**<br>15, புதியசந்தை, சாவகச்சேரி. |
| **வான்மதி நகை மாடம்**<br>171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **தமிழரசி நகை மாடம்**<br>கிளிநொச்சி. |
| **தமிழ்மதி நகை மாடம்**<br>82/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | **தமிழரசு கொள்வனவு நிலையம்**<br>கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |

## தமிழரசு நகை தொழிலகம்

[சி-10307]

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

நல்லூர் இளை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# விசாரணைக் குழு தொடர்பாக சந்திரிகா-விஜேதுங்க இழுபறி

கொழும்பில் நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டிகளை பல கிரிக்கெட் ஆர்வலர்கள் ஆவலோடு நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இதே சமயம் அங்கு சில அரசியல் நடவடிக்கைகளும் பலரது கவனத்தை ஈர்த்துள்ளன.

பிரதமர் சந்திரிகாவின் அரசு குறுகியகாலத்தில் பல தொடரான அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இது அனைவரதும் கவனத்தையும் ஈர்க்கின்றது குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பான அவரது நடவடிக்கைகள் நீண்ட காலத்தின் பின் இலங்கையில் அமைதியை தோற்றுவிக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது குறுகிய இடைவெளியுடன் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா எடுத்த முடிவுகள் முக்கியத்துவமானவை அண்மையில் அவரின் தீர்மானம் ஒன்று ஜனாதிபதி விஜேதுங்கவுடன் நேரடி மோதலை தோற்றுவித்துள்ளது விஜேதுங்க எதிர்க்கட்சியான ஐ.தே.கவை சேர்ந்தவர் இக்கட்சி 17 வருட ஆட்சியின் பின் இத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் தோற்றுள்ளது.

> பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவிற்கும் ஜனாதிபதி விஜேதுங்கவிற்கும் இடையில் விசாரணைக் குழு ஒன்று அமைப்பது தொடர்பாக எழுந்துள்ள முறுகல் குறித்து இந்திய அரசியல் ஆய்வாளர் எஸ் ஈ பத் என்பவர் எழுதிய செய்திகுறிப்பை இந்திய வானொலி நேற்று ஒலிபரப்பியது அதை இங்கு தருகிறோம்.

சிறிலங்காவின் அரசியல் யாப்பு தனித்துவமானது. பிரெஞ்பாணியிலானது. இசன்படி ஜனாதிபதிக்கும் அதிக அதிகாரம் உண்டு பிரதமருக்கு சரிசமான அதிகாரம் உண்டு இதன்படி ஜனாதிபதி விஜேதுங்க பாதுகாப்பு அமைச்சை தன்பொறுப்பில் வைத்துள்ளார் ஐ தே க ஆட்சியின் போது கடந்தகாலங்களில் காணாமற்போன மற்றும் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைக் குழுவை அமைக்க புதிய அரசு எடுத்த தீர்மானங்களை ஜனாதிபதி தற்போது நிராகரித்ததன் மூலம் அவருக்கும் பிரதமருக்கும் இடையிலான முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி எவ்விதம் நடந்துகொள்வார் என்பதே முக்கியம்.

ஜனாதிபதி விஜேதுங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பங்குபற்றுவதில் ஆர்வமில்லாதவராக உள்ளார் நாட்டில் வீசும் ஆதரவு அலை எப்படி உள்ளது என்பதை அவர் அறிவார் சந்திரிகா ஜனாதிபதி வேட்பாளராக நிற்கலாம் சந்திரிகாவிற்கான ஆதரவு வெற்றியை உறுதி செய்கிறது ஜனாதிபதி தேர்தல் நடைபெறின் பெறுபேறுகள் எப்படி அமையும் என்பது தெளிவு இதன் மூலம் பிரதமரும் ஜனாதிபதியும் ஒரே கட்சியினராகலாம்; பிரான்சில் இருவருமே வெவ்வேறு கட்சியினராகவே உள்ளனர் சிறிலங்காவை பொறுத்த வரையில் இப்படியான அரசியல் சம்பவம் இதுவே முதல் தடவையாகும் இருவரும் வெவ்வேறு கட்சியாக இருப்பதாலேயே விசாரணைக்குழு அமைப்பது தொடர்பாக உயர் மட்டத்தில் பிரச்சினை நிலவுகிறது.

## சிந்தனைக்கு..

என் திட்டம் மிக எளிமையானது
நான் ஆட்சி செய்ய விரும்புகிறேன்.
- பெனிட்டோ முசோலினி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 10-09-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண் 05

## ஜனாதிபதி வேட்பாளர்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரணதுங்கவை சுதந்திரக்கட்சி ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இதன் மூலம் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரணதுங்க நிற்கவுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்காவையே நிறுத்தப் போவதாக சுதந்திரக்கட்சி முடிவெடுத்திருந்தது. இதனை மறுவளமாகக் கூறுவதானால் சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா தீர்மானித்திருந்தார் என்றும் கூறலாம்.

ஆனால் இன்றைய நிலையில் சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்குப் பதில், சந்திரிகா குமாரணதுங்கவை நிறுத்துவது என்ற கட்சியின் முடிவிற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இதில் முக்கியமாக இன்றைய அரசியல் யதார்த்தத்தை கட்சி புரிந்து கொண்டிருக்கலாம். இதன் காரணமாக சந்திரிகா போட்டியிடுவதன் மூலமே வெற்றியை உறுதிப்படுத்த முடியும் என்பதை மதிப்பீடு செய்திருக்கலாம்.

இல்லாது போனால் சிறிமாவோவின் உடல் நலம் தேர்தலில் போட்டியிடக் கூடிய நிலையில் இல்லாமல் இருக்கலாம், அதுவும் இல்லாவிடில் சிறிமாவோ பண்டாரநாயக்காவோ தனது இயலாமையை ஏற்று போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கி மகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கலாம்.

எதில் எதுவாக இருந்தாலும் சந்திரிகா குமாரணதுங்க சுதந்திரக்கட்சிக்குள் தன்னை ஒரு பலம் பொருந்திய சக்தியாக உருவாக்கிக் கொண்டுள்ளார் என்றே கூறவேண்டும்.

## ரணிலின்பாதுகாப்புஅதிகாரி இடமாற்றப்பட்டார்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கான சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியான நிமால் லேவகே என்பவர் வேறு பகுதியொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேபோல பல முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்களின் தனிப்பட்ட பாதுகாவலர்களும் பொலிஸ் தலைமையகத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## சந்திரிகா கொலைச் சதி பொய் என்கிறது சி. ஐ டி.

(கொழும்பு)

சமரா மூலம் கண்டியில் வைத்து பிரதமர் சந்திரிகாவைக் கொல்ல சதி செய்ததாக வெளியான தகவல்களில் ஒரு சிறிதேனும் உண்மையில்லை என சி ஐ. டியினர் மறுத்துள்ளனர். இச்சதி குறித்து விசாரணை நடத்திய சி ஐ டியினர் தற்போது சட்ட நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரை அணுகியுள்ளனர்.

தமது விசாரணையிலிருந்து இச்சதி பொய்யானது என தெரியவருகிறது என சி ஐ டியினர் கூறினர். பிரதமர் தலதா மாளிகை வரும்போது அவரைக் கொல்லத் தாம் பணிக்கப்பட்டதாக சந்தேக நபர் சி ஐ டி யிடம் கூறினார் அவர்கூறிய வேறுநபர்களையும் விசாரித்த போது இச்சதி குறித்த தகவல் பொய்யானது என தெரியவந்துள்ளது.

## டி.பியை விலக கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் நிர்ணய சபை உருவாக ஜனாதிபதியை பதவி விலகும்படி, அரசு கோர வேண்டும் என நவசமசமாஜக்கட்சி கேட்டுக்கொண்டுள்ளது. பாராளுமன்றத்தை உடனடியாக அரசியல் நிர்ணய சபையாக மாற்ற வேண்டும் எனவும் அது கேட்டுள்ளது.

## படையினர் தடை

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் வட பகுதிக்கு தடை நீக்கப்பட்ட பொருள்களை எடுத்துச்செல்ல வேண்டாமென படையினர் தடுத்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கப்பல் மூலம் தடை நீக்கப்பட்டபொருள்களை கொண்டுவர முயன்றவர்களே இவ்வாறு தடுக்கப்பட்டனர். அரசின் பணிப்பெதுவும் தங்களுக்கு கிடைக்கவில்லை எனவும்

## நிர்வாகசேவைதடைபரீட்சை ஒக்டோபர் 28 இல்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படுகின்ற வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழிப் பரீட்சையும், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28ந் திகதி ஆரம்பமாகுமென்றும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி, இம் மாதம் 23ந் திகதியென்றும் அரசாங்க நிர்வாகப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

## இரு மாகாணங்களாக காட்டப்பட்டுள்ளது

### ஜோசப் பரராஜசிங்கம் கண்டனம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டப் பிரகடனத்தில் வடக்கும்-கிழக்கும் இரு மாகாணங்களாக பிரித்துக் கூறப்பட்டிருப்பதை நாம் எதிர்க்கிறோம் என தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

கடந்த செவ்வாயன்று, பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவசரகாலச் சட்டம் விரைவில் முழுமையாக நீக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## மாகாணசபை உறுப்பினர் ஆளும் கட்சிக்கு தாவல்

மத்திய மாகாண சபை ஜனநாயக ஐக்கியமுன்னணியின் உறுப்பினர் ஆறு பேர் நேற்று முன்தினம் ஆளும்கட்சியுடன் இணைந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சபைகூட்டத்தில் இவர்கள் இவ்வாறு ஆளும்கட்சியுடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அதிகாரியின் பதவியும்உயர கோரும்லஞ்சமும் உயர்ந்தது

(கொழும்பு)

இன்ஸ்பெக்டராக இருந்த போது மாதம் 2500 ரூபா லஞ்சமாக பெற்றவர் உதவி அத்தியட்சகராக பதவிஉயர்வு பெற்றதும் லஞ்சத்தொகையையும் 5000 ரூபாவாக உயர்த்தினார் குருநாகல் மாவட்டத்தில் இது தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போது இத்தகவல் வெளியானது.

இறைச்சி வியாபாரி ஒருவர் சட்டவிரோதமாக இறைச்சி எடுத்து செல்ல மேற்படி பொலிஸ் அதிகாரிக்கு மாதாந்த லஞ்சம் வழங்கி வந்தார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவி பெற்றதும் அவர் தனது மாதாந்த லஞ்சத்தை 5000 ரூபாவாக கூட்டிக் கொண்டார் மேற்படி பொலிஸ் அதிகாரிக்கு இறைச்சி வியாபாரி லஞ்சப்பணத்தை வழங்கும் போது லஞ்சத் தடுப்பு அதிகாரிகளால் இவர் கையும்மெய்யுமாக பிடிபட்டார்.

## அரசியலமைப்பு திருத்தம் கட்சிகளுடன் ஆராய்வு

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்து கட்சித்தலைவர்களுடன் எதிர்வரும் செவ்வாய் கூடி ஆராய அரசியல் விவகார அமைச்சர் ஜி. எல் பீரிஸ் தீர்மானித்துள்ளார்.

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான தீர்மானம் ஒன்றை விரைவில் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரவே தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கூறினார். அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பது ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது மட்டுமல்ல பாராளுமன்றத்தை சீர்திருத்துவதும் அடங்கும் என அவர்

## தற்காலிக ஊழியர்கள்

கூறவேண்டும்.

ஆனால் இந்த நிலையை சந்திரிகா குமாரணதுங்க இலகுவாக எட்டிவிடவில்லை சுதந்திரக்கட்சிக்குள் பலரை வெற்றிகொள்ளவேண்டியிருந்தது. பல மூத்த உறுப்பினர்கள், தீவிர பௌத்த- சிங்களப் பேரினவாதிகள், தாய், தம்பி என்ற தனது குடும்பத்தினர் அனைவரையும் வெற்றிகொண்டோடும் கட்டிபோதான் இந்த நிலையை எட்டிப்பிடிக்க முடிந்தது என்பதே உண்மையாகும்.

சந்திரிகா குமாரணதுங்கவை சுமார் மூன்று வருடங்களின் முன், சுதந்திரக்கட்சியுடன் இணைந்துக்கொண்டபோதே பெரும் எதிர்ப்பு கிளம்பியது. இருப்பினும் மகன் அனுரா பண்டாரநாயக்காவின் போக்கில் திருப்திப்படாத தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா சந்திரிகாவை தனக்கு அடுத்த வாரிசாககொண்டு வரும்நோக்கில் சேர்த்துக் கொண்டார்.

இந்நிலையில், சந்திரிகாவின் வருகையை தம்பியாரான அனுரா பண்டாரநாயக்க பகிரங்கமாகவே எதிர்த்தார். சுதந்திரக்கட்சிக்குள் இருந்த தீவிர பௌத்த- சிங்கள அடிப்படைவாதிகளான ஹெலவுறுமய குழுவினரும் அனுராவிற்கு ஆதரவாக இருந்தனர். அத்தோடு சந்திரிகா குமாரணதுங்க இடதுசாரிகளுடன் அடையாளம் காணப்பட்டமையினால், வலதுசாரிப் போக்குடையோரும் அவரதுவரவில் திருப்திப்படவில்லை.

இதேசமயம், சிறிமாவோவிற்குப் பின்னால் இந்த சிரேஷ்ட சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் சந்திரிகாவிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதை விரும்பவில்லை. சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவர்கள் தீவிரமாக ஆதரித்ததோடு, கட்சித் தலைமை, ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலைகளில் சிறிமாவோவிற்கு அவர்கள் பூரண ஆதரவு வழங்கினர். இதேசமயம் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஜனாதிபதிப் பதவியில் குறியாகவே இருந்தார். தனக்குப் பின்னரே சந்திரிகா வாரிசு என்ற நிலையே சிறிமாவோவிடம் தெளிவாக இருந்தது.

இந்நிலையில், சுதந்திரக்கட்சியில் தனது எதிர்ப்பாளர்களையெல்லாம் ஓரங்கட்டி சந்திரிகா குமாரணதுங்க முன்னணிக்கு வந்துள்ளமையானது, தனியாக வாரிசுரிமையடிப்படையில் கிடைத்தது எனக் கூறிவிட முடியாது. சந்திரிகா குமாரணதுங்கவிடம் இருந்த தனிப்பட்ட ஆற்றலும் இதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். இல்லாது வாரிசுரிமை அடிப்படையில் வந்திருப்பின் நீண்டகாலம் கட்சியில் இருந்த அனுரா கட்சியில் இருந்து ஓரம் கட்டப்படும் நிலையே உருவாகியிராது.

# தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

### தொழில் அமைச்சர் உறுதி

(கொழும்பு)

அரசாங்க, தனியார் துறைகளில் தற்காலிக ஊழியர்களாக வேலை செய்யும் அனைத்து ஊழியர்களின் வேலைகளும் நிரந்தரமாக்கப்படும் என தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வீரக்கெட்டியாவில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நீண்டகாலமாக தென்னிலங்கையை முன்னைய ஆட்சியாளர்கள் புறக்கணித்திருந்தனர் ஆனால் இன்று இப்பகுதியின் நால்வருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் அப்போது தெரிவித்தார்.

# வெளிநாடு சென்றவர்கள் காரணம் தேடுகின்றனர்

### சிறிசேனகூரேக்கு காமினி கண்டனம்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரக்காலத்தில் வெளிநாடுகளுக்கு ஓடிச் சென்றவர்கள், இப்போது ஐதேகவின் தோல்விக்கு காரணம் தேடுகின்றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் தோல்விக்கு, டி. பி. விஜேதுங்காவின் தலைமையின் போக்கே காரணமென, ஐ தே. க முன்னாள் பொதுச்செயலாளர் சிறிசேன கூரேயின் அறிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சி இப்போதுதான் ஜனநாயகப்பண்புகளுக்கு மதிப்புத்தருகிறது' கூரேயின் காலத்தைப்போலல்ல தனது கடமையை புறக்கணித்தவர் எதற்காக, தோல்வியை ஜனாதிபதி மேல் போடுகிறார் எனவும் அவர் கேட்டுள்ளார்.

# விவசாயப்பாடசாலை நிலம் பலவந்தமாக பறிப்பு

### கொழும்பு வாசிக்கு விற்கப்பட்டதாம்

(கொழும்பு)

குண்டசாலை விவசாயப் பாடசாலைக்கு சொந்தமான சுமார் 50 ஏக்கர் விளை நிலம்மகாவலி அதிகாரி யொருவரால் பலவந்தமாக பறிக்கப்பட்டு, கொழும்பைச் சேர்ந்த சிலருக்கு விற்கப்பட்ட விடயம் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

மேற்படி விவசாயப் பாடசாலைக்குச் சொந்தமான மிருக வளர்ப்பு பிரிவிற்குள் அமைந்த பெறுமதியான கட்டடங்கள் பலவும் மகாவலி அதிகாரியினால், உடைத்தழிக்கப்பட்டதும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக, காணி வனவள அமைச்சர் டி எம். ஜயரத்னா விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

க்கு கிடைக்கவில்லை எனவும் அவர்கள் பட்டினிகளிடம் தெரிவித்துள்ளனர்.

## நூல் வெளியீடு

அராலி விசாலாட்சி அம்பாள்சமேத விஸ்வநாதேஸ்வர் வரலாற்று சுருக்கம் மற்றும் பாடல்கள் அடங்கிய நூல் வெளியீடு இன்று பகல் ஒரு மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

## நியம தராசு படிகள்

இறைச்சிப் பாவனையாளரின் நலனைக்கருத்திற் கொண்டு இறைச்சியை நிறுப்பதற்கு நியமத் தராசுப்படிகளை பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதி மேற்கொண்டுள்ளது

இதற்கென மாவட்டமடங்கிலுமுள்ள இறைச்சிக் கடைகளுக்கு அவர்கள் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் இறைச்சிக் கடைகளில் இறைச்சியை நிறுப்பதற்கு நியமத் தராசுப் படிகளையே பயன்படுத்த வேண்டும் எனவும் இரும்புத் துண்டுகளையோ, கற்களையோ இத் தேவைக்காக உபயோகிக்கக் கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் நிபந்தனையை மீறும் இறைச்சிக் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அதை மேற்பார்வை செய்வதற்குமான ஒழுங்குகளை விலங்கு வேளாண்மைப் பகுதி மேற்கொண்டுள்ளது.

## பாரதி விழா

சதாவதானி. கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் இன்று மாலை 6.30 மணிக்கு பாரதிவிழா நடைபெறும். அத்துடன் மறைந்த பேராசிரியர் துரைராசாவின் திருவுருவப்படமும் நிலையத்தில் திரை நீக்கம் செய்யப்படும்.

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான தீர்மானம் ... துவதும் அடங்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

# பாடசாலை காவலாளிகள் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(தொல்புரம்)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் காவலாளிப் பதவிகள் வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு காவலாளிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன

மேற்படி அமைச்சின் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வரும் பாடசாலைகளில் 1989 ஆம் ஆண்டு முதல் கல்வித் திணைக்கள நிதியிலிருந்து வேதனம் வழங்கப்பட்டுவந்த காவலாளிப் பதவியிலுள்ள பாடசாலைகளுக்கு அப்பதவிகள் வெற்றிடமாகவிருந்தால் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது

சகல பிரதேசப் பிரிவிலும் 1989 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து பாடசாலை காவலாளி பதவிகளை பாவித்து வந்த பாடசாலைகளில் தற்சமயம் அப்பதவிகள் வெற்றிடமாக இருப்பின் அத்தகைய வெற்றிடமுள்ள பாடசாலைகளின் விபரத்தினை அனுப்பி வைக்குமாறு சகல பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன [41]

## கடன் வழங்கல்

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக இடம் பெயர்ந்து குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சுயதொழில் கடன்களை வழங்கியுள்ளனர்.

இந்த வகையில் தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து குடியிருப்புக்களில் வாழும் குடும்பங்களுக்கு கடந்த மாதம் கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இக்கடனுதவிகள் வழங்கப்பட்டன.

இதில் சாம்சன் குடியிருப்பில் 6 பயனாளிகளுக்கும், லவனிதா குடியிருப்பில் 15 பயனாளிகளுக்கும், பண்டிதர் குடியிருப்பில் 3 பயனாளிகளுக்கும், டயஸ் குடியிருப்பில் 2 பயனாளிகளுக்குமாக மொத்தம் அறுபதினாயிரம் ரூபா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் கடற்றொழில் ஊக்குவிப்புக்கென 24 பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபா கடன்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# 8000 பரல் மண்ணெய் மாகோவில் வரும்

(யாழ்ப்பாணம்)

இம்மாதத்திற்கான 8000 பரல் மண்ணெண்ணெயுடன் 'மாகோ' கப்பல் எதிர்வரும் 14 ஆம் திகதி பருத்தித்துறை வந்து சேருமென யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 'கபறண' என்கிற கப்பல் 2000 மெற்றிக் தொன் உரத்துடன் கொழும்பு துறைமுகத்தில் இருந்து வடபகுதி நோக்கி புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(பா, இ)

## மரண அறிவித்தல்கள்



### பொன்னம்பலம் கணேசமூர்த்தி M Sc. (Agr.)

(முன்னாள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியரும், முன்னாள் விவசாய கல்வி அதிகாரியும் வவுனியா, யாழ்ப்பாணம்)

பொன்னம்பலம்கணேசமூர்த்தி லண்டனில் அகால மரணமானார். இவர் ஓய்வுபெற்ற சுகாதாரக் கல்வியதிகாரி பொன்னம்பலம் வேதநாயகி தம்பதிகளின் மூத்த புதல்வனும், லஷ்மி (தேவி) யின் அன்புக் கணவரும், பார்த்திபன், மாதவன், காண்டீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, சத்தியமூர்த்தி (பொதுமுகாமையாளர் வடமராட்சி ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி), நிர்மலாதேவி ஆகியோரின் சகோதரரும், சிற்றம்பலம் (புள்ளி விபரவியலாளர் கச்சேரி, மட்டக்களப்பு), DR. வேலாயுதம் (பதிவு வைத்திய அதிகாரி அரசினர் மருத்துவமனை - வரணி), வள்ளிநாயகி, சிவபாக்கியம், பாறுபதி, திரவியநாயகி, சரஸ்வதி, கோப்பெருந்தேவி ஆகியோரின் மைத்துனரும், மயூரனின் பெரியதந்தையும். கபிலன். பரணன், நக்கீரன், பகிரதன், வைதேகி, வாசுகி ஆகியோரின் மாமனாருமாவார் இவரது இறுதிக் கிரியைகள் லண்டனில் இடம்பெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. பொன்னம்பலம்
(தந்தை)

'நிமலகம்'
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(5897)

### முருகேசு சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய கணக்காளர், வைத்திலிங்கம் கம்பனி, கொழும்பு)

சுளிபுரத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட மு. சிவசுப்பிரமணியம் 6ஆம் திகதி லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற தர்மநாயகியின் அன்புக் கணவரும், மணிவண்ணன் (அவுஸ்திரேலியா), கருணைவண்ணன் (இலண்டன்), ராஜவண்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி கு இராசதுங்கம், காலஞ்சென்ற மலேசியா தம்பிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், இ. சிவநேசராசா (இளைப்பாறிய ஆசிரியர்), இ. மகேந்திரன் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், திருமதி மணிவண்ணன். திருமதி கருணைவண்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார், இறுதிக் கிரியைகள் இன்று 10ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். ...

# துறைமுக அதிகாரசபையால் ஹபறன கப்பல் தடுத்துவைப்பு

## துறைமுகத்தில் ஏற்பட்ட விபத்தின் எதிரொலி

(கொழும்பு)

பருத்தித்துறை நோக்கி புறப்பட்ட ஹபறன கப்பல் துறைமுக அதிகார சபையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து உரம் ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை நோக்கிப்புறப்பட்ட வேளை இக் கப்பல் சுவருடன் மோதி விபத்துக்குள்ளாது இதனால் பல லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டதாகவும் இந்த நட்டத் தொகையினை கப்பல் கம்பனி செலுத்தும்வரை துறைமுகத்தைவிட்டு கப்பல் வெளியேறாது துறைமுக அதிகார சபை தடுத்து வைத்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

மேக்கன்ரைல் சிப்பிங் லைன்ஸ் தனியார் கம்பனிக்குச் சொந்தமான இக் கப்பல் ருகுணு விற்குபதிலாக கடந்த செவ்வாய்க்கிழமையே முதல் தடவையாக பருத்தித்துறை நோக்கி உரத்தை ஏற்றிக் கொண்டு புறப்பட்டவேளையே விபத்துக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

### சலந்துரையாடல்

இன்று மாலை 3 00 மணிக்கு சலை ஊடக இணையத்தின் வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஒடியோ நாடா விநியோகஸ்தர்கள், தொழில் நுட்ப சேவையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் கோண்டாவில் யாழ் மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் உள்ள திலீபன் மண்டபத்தில் நடைபெறும்.

### கூட்டம்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு-1994 தேர்வின் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட கட்டுப்பாட்டுத் தேர்வாளர், முதன்மைத்தேர்வாளர், மதிப்பீட்டு நிலைய இணைப்பாளர் அனைவருக்குமான கூட்டம் நாளை ஞாயிறு காலை9 00 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். அனைவரும் தவறாது சமுகம் கொடுக்கும்படி தேர்வுச் சபை ஆணையாளர் கேட்டுள்ளார்-

# பயிலுநர்ஆசிரியர்வழிகாட்டி இன்மையால் பலர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கு பயிலுநர் ஆசிரியர்களிற்கான வழிகாட்டி Models) நூல்கள் முழுமையாக வந்துசேராததால் பெருமளவு பயிலுநர் ஆசிரியர்கள் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பயிலுநர் ஆசிரிய வட்டாரங்கள் கவலையடைந்துள்ளன.

ஒரு கல்வி ஆண்டுக்கு நாற்பது நூல்கள் தேவையான இவ் வேளையில் இதுவரைக்கும் நான்கு நூல்களே யாழ். குடாநாட்டிற்கு வந்து சேர்ந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் வரும் கார்த்திகை மாதம் எப்படி பரீட்சைக்கு தோற்றுவது என மேற்படி ஆசிரிய பயிற்சியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

இந்த வழிகாட்டி புத்தகங்கள் யாழ் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகளின் அசமந்த போக்கு காரணமாகவே இதுவரைக்கும் வந்துசேராமல் இருப்பதாகவும் இந் நூல்கள் தற்பொழுது திருகோணமலை துறைமுக பகுதியில் காத்துக் கிடப்பதாகவும் மேலும் தெரியவருகிறது-

(88), (நி)

### வீதிவிபத்தில்

ரி. மார்க்கண்டு (வயது 67) மயிலங்காடு, எஸ் பிறேமானந் (வயது 05, கொடிகாமம், கே சரஸ்வதி வயது53) யாழ்ப்பாணம், ஆர். யோகநாதன் (வயது13)கைதடி ஆகியோரே வீதி விபத்தில் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (88)

### தாக்குதல் கள

தார்.

''இம் மோதல் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நீடித்தது. இதில் குறைந்தது இரண்டு இராணுவத்தினர் பலியாகினர், மேலும் ஐவர் காயமடைந்தனர்.

''இதுவரை யுத்த நிறுத்தம் குறித்து உத்தியோகபூர்வ அறிவுறுத்தல் எதுவும் கிடைக்கவில்லை ஆனால் யுத்த நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறலாமென தற்போது கிடைக்கும் தகவல்களிலிருந்து தெரியவருகிறது. யுத்த நிறுத்தம் தொடர்பாக அறிவிக்கப்பட்டாலே இவ்வாறான மோதல்களைத் தடுக்கலாம்'' என அவர் மேலும்கூறினார்.

### யாழ்.

கிக்கக் கூடப் போதாது என்றார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், 1969 - 70 காலப் பகுதியில் மின்சாரத்தை குடாநாட்டுக்கு விநியோகிக்கக் கூடிய நிலையிலேயே சுன்னாகம் மின் நிலையம் இருந்ததெனவும் அதற்குப் பிந்திய காலப் பகுதியில் ஏற்பட்ட அதிகரித்த மின் பாவனையினால் இவற்றால் மின்சாரம் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்ட


கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் 32-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தும் தோல்பந்து

**கிரிக்கெட் சுற்றுப் போட்டி**

6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்தப் போட்டியில் 6 வீரர்கள் பங்கு பெறலாம்.

★ விண்ணப்ப முடிவு திகதி12-09-94 (திங்கள்)

★ போட்டிகள் 18-ம், 19-ம் திகதிகளில் நடைபெறும்.

குறிப்பு:- கரபந்தாட்டப் போட்டிகள் 12-09-94 (திங்கள்) பி ப. 2 மணிக்கு ஆரம்பமாகும்.

நிர்வாகம்

(9357)

யாழ்ப்பாணக் கல்லூரியின்


# கப்டன் கதிரவனுக்கு நினைவுக்கல் நாட்டல்

யாழ் மாவட்டத்தில் கடந்த 4-ம் திகதி சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தீவகக் கோட்டத் துணைப் பொறுப்பாளர் கப்டன் கதிரவன் / ஜோக்கின் (ஜேசுதாசன் பிறேமன் இருதயகுமார் 5-ம் வட்டாரம், எழுவைதீவு, தற்போதைய முகவரி 68, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்) அவர்களின் வித்துடல் கிடைக்கப்பெறாமையால் அவரது திருவுருவப்படம் கொய்யாத்தோட்டம் இல்லத்திலிருந்து இன்று பி. ப. 12. 30 மணிக்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் பழைய பூங்கா வீதியூடாக சுண்டுக்குளிச் சந்தியை அடைந்து கொழும்புத்துறைவீதி, கண்டி வீதி, கோவில் வீதியூடாக கைலாசபிள்ளையார் கோவில் சந்தியை அடைந்து பின் நாவலர் வீதியூடாக யாழ், ஐந்து சந்தி கார்த்திகாபாலர் பாடசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கு மக்களின் இறுதி வீரவணக்கம் நிறைவுற அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் மானிப்பாய் வீதியூடாக யாழ் நகரை அடைந்து யாழ் மருத்துவமனை வீதியூடாக கண்டிவீதியைச் சென்றடைந்து தென்மராட்சி நெற்பெலி பண்டிதர் குடியிருப்பை அடையும்.

அங்கு மக்களின் இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் கச்சாய் வீதியூடாக சாவகச்சேரி கண்டி வீதி வழியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்படும்.

### ஜனாதிபதி

என்பதை வெளிப்படையாக பகிரங்கப்படுத்தவில்லை எனினும் பாராளுமன்றத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து ஐ.தே கவினுள் அவருக்கு செல்வாக்கு குறைந்திருந்தது தெரிந்ததே.

### சமாதானம்

தர சமாதானம் ஏற்படும் காலம் எப்போதோ கடந்து விட்டது.

புதிய அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் ஏற்படும் சமாதானம் நிலைக்கும் என்ற நம்பிக்கை இராணுவத்திற்கு இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். (தி), (பா)

### மருதடியில்

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. யன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் இரும்புப்பாதுகாப்பு பெட்டியை உடைத்து நகை மற்றும் பெருந்தொகை நாணயக் குற்றிகள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

கொள்ளையிடப்பட்ட பொருள்களின்மொத்தப்பெறுமதி இன்று தெரியவருமென காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். (சி)

### இன்று

வது அமர்வு மாலை 2. 00 மணிக்கும் நடைபெறவுள்ளது.

முதலாவது அமர்வில் காலஞ்சென்ற யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசாவுக்கு விஞ்ஞான கலாநிதி என்னும் கௌரவப் பட்டம் தேகாந்த நிலையில் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து அதே அமர்வில் கலாநிதிப் பட்டம், கல்வியியல் பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ், ஆங்கிலமொழி கற்பித்தல் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திர சிகிச்சை மாணி, வர்த்தகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும்.

இரண்டாவது அமர்வில் முதுவிஞ்ஞானமாணி, விஞ்ஞானமாணி, தொழில் நிர்வாகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும்.

மூன்றாவது அமர்வில் முதுமெய்யியல் மாணி, முதுகலைமாணி, கலைமாணி, இசைக்கலை மாணி, நாட்டியக் கலைமாணி, சித்த மருத்துவ சத்திரசிகிச்சை மாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கிடையில் பரீட்சையில் திறமையுடன் சித்தியடைந்து பட்டம் பெற்றவர்களுக்கு ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் பரிசில்களும் புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(பா) (தி)

### இரண்டாம்

மரணம் தொடர்பாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதில் இருபத்தி ஆறு குழந்தைகளின் மரணம் முதிராத நிலையில் ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது

ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார், இறுதிக் கிரியைகள் இன்று 10ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். கொழும்பு முகவரி: இல, 2 40 ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை. தயவுசெய்து உறவினர்களும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ, மகேந்திரன்
அதிபர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(9353)

## கப்டன் கதிரவன்

### பிறேமன் இருதயகுமார்

எழுவைதீவைச் சேர்ந்த யேசுதாசன் பிறேமன் இருதயகுமார் வீரச்சாவடைந்துவிட்டார். இவர் திரு. திருமதி யேசுதாசன் மணி தம்பதிகளின் அன்பு மகனும், யோண்சன், றொபின்சன், கொண்சன், விஜயன், றொபினா ஆகியோரின் அருமைச்சகோதரனும்ஆவார். இவர், தீவகக் கோட்ட துணைப் பொறுப்பாளருமாவார். அன்னாரின் திருவுருவப்படம் இன்று 10-9-94 சனிக்கிழமை காலை 10 மணிக்கு இலக்கம் 68, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம் இல்லத்திலிருந்து அஞ்சலிக்காக ஐந்து சந்தி கார்த்திகா பாலர் பாடசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இறுதி வீரவணக்க கூட்டத்துடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்படும். இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

68, பழையபூங்கா வீதி,
கொய்யாத் தோட்டம்.

தகவல்:
நவம் (மாமா)

(9355)

## முருகேசபிள்ளை சிவபாலன்

(தில்லைக்காளி தேவஸ்தான ஸ்தாபகர், மாவிட்டபுரம்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட முருகேசபிள்ளை சிவபாலன் 9-9-94 இல் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் முருகேசபிள்ளை அழகம்மாவின் அன்பு மகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், சிவசக்திதாசனின் அன்புத் தந்தையும், தயாவதியின் அன்பு மாமனாரும், சிவராணி, சிவச்செல்வம், சிவரூபினி ஆகியோரின் பேரனும், சிவமணி, சிவபாக்கியதேவி, சிவானந்தராசா ஆகியோரின் சகோதரனும், குணரட்ணம், குமாரசாமி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார், அன்னாரின் ஈமக்கிரியைகள் பறாளை றோட், சுழிபுரம் இல்லத்தில் 10-9 94 சனிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. குணரட்ணம்
(மைத்துனர்)

(9354)


யாழ்ப்பாணக் கல்லூரியின்

★ "பாரதி விழா
வழக்காடு மன்றம்" ★

நேற்று (09 - 09 - 1994) மாலை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டப்படிப்புகள் நிறுவனத்தில் இடம் பெற்ற

★ குற்றக் கூண்டிலே பாரதி ★

வழக்காடு மன்றத்தின் ஒத்திவைப்பு வழக்கு, 12-09-94 அன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். நகரில் அதே பட்டப் படிப்புகள் நிறுவனத்தில் வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(சி-10315) - நிர்வாகம்



சுன்னாகம் வணிகர் கழகம்

முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 14.9.94 புதன்கிழமை மாலை 2 30 மணிக்கு சுன்னாகம் சந்தை மைதானத்தில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் வணிகர் கழகத்தின் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளதால் அனைத்து வணிக உறுப்பினர்களும் தமது நிலையங்களைப் பூட்டி பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவும்.

வணிகர் கழகம்
சுன்னாகம்

(10314)


மின் பாவனையினால் இவற்றால் மின்சாரம் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். (சி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 09- 10**
**சனி இரவு**

08. 01 அறிவியற் கலசம்
08. 10- நிகழ்வும் பகிர்வும்
08. 25- நேயர் கடிதங்கள்
08. 30- செய்திகள்
08.40- சித்திரம் 'கற்பக தருவை கண் போற் காப்போம்'

**1994- 09- 11**
**ஞாயிறு காலை**

07. 02- மாவீரவணக்கம்
07. 15- களத்தில் மலர்ந்தவை
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின்தொடர்ச்சி.

காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். (சி)

### ஜனநாயக

என சி. ஐ. டி. விசாரணை மூலம் தெரியவந்துள்ளது என்றார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் செய்த போது சுதந்திரக்கட்சி அதை தீவிரமாக எதிர்த்தது. இந்தியாவுடன் நல்லுறவின்றி எதையும் செய்ய முடியாது என அச்சமயம் அநுரா பண்டாரநாயக்கா கூறினார் நானும் சமாதானத்தையே விரும்புகிறேன் என்றார்.

### பிரிப்போ

பரவலாக்கப்பட்டது மங்கள முனசிங்க தலைமையில் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு இணைப்பே பிரதான பிரச்சினை. புதிய பிரதமர் சந்திரிகா எல்லைமீள் நிர்ணயம் தொடர்பான பொறுப்பை ஏற்றுள்ளார் என குறிப்பிட்டார்.

நிலையில் ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது

இதேவேளை சளிமுட்டு நோயினால் பதின்மூன்று குழந்தைகளும், இருதயக் குறைபாட்டினால் எட்டு குழந்தைகளும் மற்றும் வயிற்றோட்டம், பிறப்புடன் ஒத்த குறைபாடு, செப்டிசீமியா போன்ற நோய்களினால் தலா ஐந்து குழந்தை என்ற ரீதியில் மரணம் அடைந்துள்ளமையும் அறியப்பட்டுள்ளது.

(நி), 88)

### சந்திரிகா

பிரதிநிதிகளை சந்தித்துப் பேசி அங்கு நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அவர் முயற்சித்துள்ளார்.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடல் மற்றும் விட்டுக்கொடுப்புகள் மூலம் தீர்த்து வைக்க வேண்டுமெனவும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அரசு நன்கு அறிந்துள்ளது எனவும் அவர் தொழிலாளர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் தம்பு

(முன்னாள் போக்குவரத்துச் சபை சாரதி)

வேலணை கிழக்கு 1-ம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்டவரும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பண்டிதர் ஜெகநாதன், ராசம்மா, சொர்ணம்மா, இளையபிள்ளை ஆகியோரதும், சண்முகராசா, நகுலாம்பிகை ஆகியோரதும் சகோதரரும், ஆறுமுகம், பரிமளம் அவர்களின் மைத்துனரும், பாலசுப்பிரமணியம், நாகேஸ்வரியின் அன்பு பெரிய தகப்பனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை நடைபெற்று இன்றுபி.ப. 2 மணிக்கு தகனக்கிரியைக்காக இல. 24 சந்தனமாதா கோவில் வீதி, சுண்டுக்குளியில் இருந்து பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்; கா. ஆறுமுகம்

24, சந்தனமாதா கோவில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(9356)


யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30, மாலை 6.00

WAY OF THE DRAGON
[கராட்டி]

சனி, ஞாயிறு தினங்களில்
பி.ப 2.15 மணிக்கு மட்டும்
SOCCER WORLD CUP . 1994
BRAZIL VS ITALY - FINAL
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 1994
பிறேசில் எதிர் - இத்தாலி இறுதி ஆட்டம்

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்
CIRCUS
இதனுடன்
BIG BOSS படத்திலிருந்து புறூஸ்லீயின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும், RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.

(சி-10230)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது